சற்று செலவு அதிகமாகும் என்பதை இந்த அரசு உணருகிறது. ஆகவே இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு 75 அடியும் அதற்கு மேலும் ஆழமுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுப்பவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 10 பைசா என்பதை 9 பைசாவாக மின் சாரக் கட்டணத்தைக் குறைப்பது என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. இதனால் சுமார் 1,20,000 விவசாயிகளுக்குச் சலுகை கிடைக்கும்.

(5) தன்னிலை விளக்கம்.

திண்டிவனம் கூட்டுறவு நில அடைமான வங்கியில் தான் உறுப்பினராக இல்லை என்று கூறியதைத் திருத்தி திரு. க. இராமமூர்த்தி அளித்த விளக்கம்.

THIRU K. RAMOORTHY : Hon. Speaker, Sir, on 2nd April 1970 while intervening in the reply by the Hon. Minister for Co-operation I said that I was not a member of the Land Mortgage Bank in Tindivanam. On verification I found that I had been a member of the Tindivanam Co-operative Land Mortgage Bank by virtue of a loan I have received from the bank for sinking a new well. I have mentioned this fact in my statement of assets and liabilities. I request that that part of my intervention be delited from the proceedings. The error was due to the fact that I misundestood membership for directorship.

(6) கவன ஈர்ப்பு

(அ) தாமதமாக மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப் பட்ட மாணவர்கள் பல்கலைக் கழக தேர்விற்கு அனுமதிக் கப்படாத நிலை.

THIRU J. JAMES : Mr. Speaker Sir, I call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, about 35 Medical College students of the Madras University who were admitted for 1969–70 course on 19th September 1969. that is after one month and nineteen days of the reopening of the College due to the pendency of the writ petitions in the High Court, but they were not permitted to sit for the examination to be held in April 1970 along with the other students by the University authorities, though they also remitted fees for the examination and completed the course along with the other students.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1969-ஆம் ஆண்டு ஜூலையில் ஆரம்பிக்கும் முதலாம் ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி. பி.எஸ். வகுப்பில் சேர்க்கப்படுவதற்கென தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 31—7—1969 அன்று அல்லது அதற்கு முன்னர் கல்லூரிகளில் சேரவேண்டுமெனக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வகுப்புகளில் சேராததால் முதல் ஆண்டு ஒருங் கிணைந்த எம்.பி.பி.எஸ். வகுப்பில் 24 காலியிடங்கள் ஏற்பட்டன. இதற்கிடையில், தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்களில் பலர்